1

# நம்பிக்கை

## நம்பிக்கை

நாம் வாழும் இந்தக் காலம் பல வகையிலும் முன்னேறியிருக்கிறது. நம் முன்னோர்களின் காலத்தில் இல்லாத எத்தனையோ புதிய கருவிகளை நாம் பெற்றிருக்கிறோம். மிக வேகமாகப் பயணம் செய்ய முடிகிறது; ஆயிரக் கணக்கானவர்களின் கைகள் உழைத்து செய்யமுடியாத அரிய வேலையை ஒரு இயந்திரத்தைக்கொண்டு செய்து விடமுடிகிறது. தொழிற்சாலைகளில் மிக எளிதில் மிக வேகமாகப் பொருள்களை உற்பத்திசெய்ய முடிகிறது.

ஆனால் ஒன்று தான் முடியவில்லை. நம் முன்னோர்களைப் போல அவ்வளவு அமைதியாக இன்பமாக வாழ முடியவில்லை. பல வகையிலும் நமக்கு உதவி வருகிற அறிவியல், நம் வாழ்க்கையின் அமைதிக்கு அவ்வளவாக உதவி செய்ய முடியவில்லை. இயற்கை வளம் மிகுந்த செல்வம் கொழிக்கும் நாடுகளிலும் மக்களின் வாழ்க்கையில் குறை பல இருந்து வருகின்றன. வறுமை மிகுந்து வாடும் நாடுகளில் உள்ள குறைகளைச் சொல்லத் தேவையில்லை. ஆகவே பல வகையிலும் முன்னேறியுள்ள இந்தக் காலத்தில் வாழும் வழி மட்டும் இன்னும் தெளிவாக அமையவில்லை என்று தெரிகிறது.

அரிசி, பருப்பு, உப்பு, மிளகாய், காய்கறி முதலிய பல வகைப் பொருட்களையும் நிரம்பச் சேர்த்து வைக்கக் கற்றுக் கொண்டிருக்கிறாள் ஒருத்தி. ஆனால் சுவையாகச் சமைத்து உண்ணத் தெரியாதவளாக இருக்கின்றாள். அவள் சேர்த்து வைத்துள்ள பண்டங்களால் பயன் என்ன? அது போலத்தான் உள்ளது இக்காலத்து வாழ்க்கையின்பம். சயன்ஸ் என்னும் அறிவியல் துறையின் வளர்ச்சியால் கருவிகளைப் பெருக்கிக் கொண்டோம் வேகத்தை வளர்த்துக் கொண்டோம்; ஆனால் நன்றாக வாழக் கற்றக் கொள்ளவில்லை.

முன்னோர்கள் சொன்ன வழிகள், அவர்கள் நடந்து பயன் கண்ட வழிகள், தேய்ந்த ஒற்றையடிப் பாதைகள் போன்றவை. ஆனால் முன்னோரின் வழிகளை நம்ப மனம் இல்லை; புதிய வழிகளைச் செம்மையாக வகுத்துக் கொள்ளவும் முடியவில்லை.

வாழ்க்கையில் அன்பு வேண்டும். அருள் வேண்டும். உண்மை வேண்டும், நன்றியுணர்ச்சி வேண்டும் என்றெல்லாம் சான்றோர்கள் அறிவுறுத்தினார்கள். திருக்குறள் முதலான நீதி நூல்கள் இவற்றைத் தெளிவாக உணர்த்துகின்றன. ஆனால் அறிவியல் தரும் விளைக்கங்களை மனம் நம்புவது போல், இந்த அறநெறியை - வாழ்க்கைநெறியை நம்புவதில்லை. வானத்தில் பறக்கும் விமானத்தைப் பற்றியோ, வானொலிப்பெட்டியைப் பற்றியோ, சந்திர மண்டலத்துக்குச் சென்று வரும் கருவியைப் பற்றியோ அறிவியல் விளக்கம் சொன்னால் மனம் வியப்போடு கேட்கிறது; நம்புகிறது; பணிகிறது.

அருளின் சிறப்பையோ உண்மையின் பெருமையையோ கணக்கு முதலியவற்றைப் கொண்டு விளக்கிக் காட்ட முடியாது. கதைகள் வரலாறுகள், நாடகங்கள் முதலியவற்றால் தான் விளக்கிச் சொல்லமுடியும். அப்படிச் சொன்னாலும் மனம் அறிவியலை நம்புவது போல் அவ்வளவு நம்புவதில்லை; அறிவியலுக்குப் பணிவது போல் அறநெறிக்குப் பணிவதும் இல்லை.

பொய் சொல்லக் கூடாது. நன்றி மறக்கக் கூடாது, அன்போடு பழக வேண்டும். இன்சொல் நன்மை பயக்கும் என்னும் அறிவுகைள் எல்லாம், மறு உலகிற்கு உதவியான புண்ணிய வழிகள் என்று பலர் எண்ணுகின்றார்கள். இந்த உலகத்தில் மக்கள் சமுதாயமாய்க் கூடி வாழ்வதற்கு அவை தேவையானவை. பொய்யர் பலர், நன்றியில்லாதவர் பலர் உள்ள சமுதாயத்தில் வாழ்க்கை அமைதியாக இருக்காது; ஒருவரையும் எளிதில் நம்ப முடியாது; உள்ளம் கலந்து யாருடனும் பழக முடியாது அப்படிப்பட்ட நிலைமை ஓர் ஊரில், ஒரு நாட்டில் பெரும்பான்மையாக இருந்தால். அங்கு வாழ்க்கை அமைதியாக நடப்பதற்கு வழி இல்லை. ஆகையால் நம் முன்னோர்கள் நீதிநெறிகளாக வற்புறுத்திக் கூறியவை இந்த உலகில் அமைதியாக வாழ்வதற்குத் தேவையானவை என்பதைத் தெளிவாக உணரவேண்டும். செத்த பிறகு முக்திக்கு உரிய வழிகள் என்று அன்பு, உண்மை முதலியவற்றை ஒதுக்கி வைக்கக் கூடாது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அவை தேவையானவை என்று உணர வேண்டும். அன்பு இல்லாமல் நண்பர் இருவர் சேர்ந்து பழக முடியுமா? அன்பு இல்லாத ஒரு குடும்பத் தலைவரை மனைவி மக்கள் நம்பி வாழ்க்கை நடத்த முடியுமா? நாட்டினிடத்திலும் மொழியினிடத்திலும் அன்பு இல்லாத மக்களைக் கொண்டு நல்ல ஆட்சி நடத்த முடியுமா? நாட்டினிடத்திலும் இல்லாத தொழிலாளிகளைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை வளம் பெற நடத்த முடியுமா? நேர்மை இல்லாத அறிவாளிகளைக் கொண்டு ஓர் அலுவலகத்தைச் செம்மையாக நடத்த முடியுமா? ஆகவே, அன்பு, உண்மை, நேர்மை முதலியவை இந்த வாழ்க்கைக்குத் தேவையானவை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

ஒரு சிலர் நீதியாக வாழாமலே பெருஞ்செல்வராக ஆகிவிடுகிறார்கள். அறநெறியில் நடக்காத ஒரு சிலர் பெரிய பதவியும் பெற்று விடுகின்றார்கள். அவர்களைப் பார்க்கும் இளைஞர்கள் திகைப்படைகிறார்கள்; நீதியாக வாழாவிட்டால் என்ன, அறநெறியில் நடக்காவிட்டால் என்ன என்று எண்ணுகின்றார்கள்; நாளடைவில், நீதியிலும் அறநெறியிலும் நம்பிக்கை அற்றவர்களாக ஆகிவிடுகின்றார்கள்; மனம் போனபடி வாழ முற்படுகின்றார்கள். அது தவறு.

ஏன் என்று கேட்கலாம். அறநெறியில் நடப்பவர்களில் நூற்றுக்கு எத்தனை பேர் தாழ்ந்து விடுகின்றார்கள். அறநெறியில் நடக்காதவர்களில் நூற்றுக்கு எத்தனை பேர் உயர்ந்து விடுகின்றார்கள் என்று கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். அவ்வாறு கணக்கிட்டுப் பார்க்காத காரணத்தினால்தான் இளைஞர்களின் மனம் அவசரப்படுகிறது. தீய வழிகளில் நடப்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் கெட்டுப் போகிறார்கள். யாரோ ஒரு சிலர் நூற்றுக்கு ஒருவர் இருவர் தான் செல்வம் பெறுகின்றார்கள்; பதவி பெற்று உயர்கிறார்கள். அவர்கள் விதிவிலக்காக முன்னேறியவர்கள். அவர்களைப் போல் பலர் ஆவதில்லை. வேறுகாரணங்களால் அவர்கள் முன்னேறினார்கள் என்பதை இளைஞர்கள் மறந்து விடுகின்றார்கள்.

அவர்கள் இன்னொரு வகையாகவும் எண்ணிப் பார்க்க வேண்டும். கிழக்கே ஒரு வழி; மேற்கே ஒரு வழி. கிழக்கு வழியில் போனவர்களில் பெரும்பாலோர் சிறு நன்மையாவது அடைகிறார்கள். மேற்கு வழியில் போனவர்களில் பெரும்பாலோர் அழிகிறார்கள்; ஒரு சிலர் மட்டுமே சிறப்பாக இருக்கிறார்கள். புதிதாக வருவோர்க்கு எந்த வழி நல்லது என்று சொல்வோம். மேற்குவழியில் யாரோ ஒரு சிலர் மட்டும் சிறப்புப் பெறுவதைப் பார்த்து, அந்த வழியில் போகுமாறு ஒருவருக்கும் அறிவுரை சொல்ல மாட்டோம். அதுபோலவே, எவ்வளவு நன்மை வருவது போல் தோன்றினாலும், தவறான வழியைப் பிறர்க்குக் காட்டக் கூடாது, நாமும் ஏற்கக் கூடாது. அறநெறியை விட்டு விலகக் கூடாது என்பதைத் தெளிவாக உணர வேண்டும். அறநெறியால்தான் இன்பம் பெற முடியும் என்று புத்தர், திருவள்ளுவர் முதலான சான்றோர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்க்கையனுபவத்தால் கற்ற உண்மைகளை நம் நன்மைக்காகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்

எல்லோரும் கண்மூடி வாழ்ந்தவர்கள் அல்லர்; எவ்வளவோ எண்ணிப் பார்த்து, வாழ்ந்து பார்த்து, அவற்றால் தெளிந்த உண்மைகளை நாமும் உணர்ந்து நடக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். புத்தர், திருவள்ளுவர் முதலானவர்கள் சிறந்த சிந்தனையாளர்கள், சீர்திருத்தக்காரர்கள். அவர்கள் அறிவுறுத்திய வழிகள், கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் தேய்ந்த ஒற்றையடிப் பாதைகள் போன்றவை. அந்தத் தேய்ந்த வழிகளில் அச்சம் இல்லாமல் தயக்கம் இல்லாமல் நடப்பதால் நமக்கு எவ்வளவோ நன்மை உண்டு.

மின்விளக்கு, மின்விசிறி, வானொலிப் பெட்டி முதலியவற்றை இயக்குகிறோம். பழுது பார்க்கிறோம். சில அடிப்படை விதிகளை நம்பிக்கையோடு கற்றுக் கொண்டு அவற்றை நம்பி அந்தக் கருவிகளை இயக்கிப் பயன்படுத்துகின்றோம். ஒவ்வொரு விதியையும் அலசி ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்க நேரமில்லை. ஆகவே நம்புகிறோம் கற்கிறோம். அறநெறிகளையும் அப்படி நம்புவதே நல்லது. ஏன் என்றால் சான்றோர் பலர் அவற்றைத் தம் வாழ்க்கையில் பயின்று பயன் பெற்று நற்சான்று வழங்கியிருக்கிறார்கள்.

இன்னொன்றும் எண்ணிப் பார்க்கவேண்டும். சில காலங்களில் புயல் போன்ற நிலை சமுதாயத்தில் இருப்பது உண்டு. நீர் கீழ் நோக்கிப் பாய்வது; தீ மேல் நோக்கி எழுவது. ஆனால் புயல் காலத்தில் நீர் மேல் நோக்கிச் செல்வதும் காண்கிறோம்; தீ கீழ்நோக்கி அசைவதும் காண்கிறோம். அவற்றைக் கண்டு, நீருக்கும் தீக்கும் உள்ள இயல்பான தன்மைகள் மாறிவிட்டன என்று சொல்ல முடியுமா? அது போலவே புயல் போன்ற நிலையில் உள்ள சமுதாயத்தில், நல்லவர் சிலர் வாடுவதும் உண்டு தீயவர் முன்னேறுவதும் உண்டு. ஆனால் அவை நிலையாக நடப்பவை அல்ல. புயல் மாறியே தீரும். இயல்பான தன்மைகள் வெற்றி பெற்றே தீரும். நல்லொழுக்கம் நன்மை தரும் என்றும், தீயொழுக்கம் தீமையே விளைக்கும் என்றும் திருவள்ளுவர் சொன்னது நிலையான உண்மையாகும்.

**“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்: தீயொழுக்கம் :**
**என்றும் இடும்பை தரும்”**

பிற உயிர்களை வதைத்து வாழும் புலி, சிங்கம், பாம்பு, தேள் முதலியவை எப்படி வாழ்கின்றன? பகல் ஒளியில் தலை காட்டாமல் பாறைகளின் இடுக்கிலும் புதர்களின் இருட்டிலும் பதுங்கி வாழ்கின்றன. இரவில் தான் வெளியே திரிகின்றன. அப்போதும் அஞ்சி அஞ்சி ஒதுங்கி ஒடுங்கியே திரிகின்றன. ஆனால் தீங்குசெய்ய அறியாத மான், முயல் முதலானவை பகலில் நல்ல ஒளியில் காட்டின் வெட்ட வெளியில் திரிந்து வாழ்கின்றன. கெட்ட விலங்குகள் ஒன்று சேராமல் பிரிந்து வாழ்கின்றன. நல்ல உயிர்கள் கூட்டங் கூட்டமாய் ஒற்றுமையாய் வாழ்கின்றன. இந்த உலகமே சான்று (மல்லல் மாஞாலம்).

கரி என்று திருவள்ளுவர் அறநெறியை - அருள்நெறியை - வற்புறுத்தியபோது எவ்வளவோ எண்ணிப் பார்த்துத் தெளிந்துதான் கூறியிருக்கிறார்.

காட்டில் உள்ள இந்த நிலைமைதான் நல்ல நாட்டிலும் இருக்க வேண்டும். நாட்டின் நீதிமன்றங்களிலும் அலுவலகங்களிலும் கடைத்தெருக்களிலும் தீயவர்கள் தலை நிமிர்ந்து திரிகிறார்கள்; நல்லவர்கள் அஞ்சி வாழ்கிறார்கள். அது மாற வேண்டும். கெட்டவர்கள் ஒற்றுமையாய்த் தலைநிமிர்ந்து வாழும் நிலைமையும், நல்லவர்கள் ஒடுங்கி நிற்கும் நிலைமையும் மாற வேண்டும். அறநெறியில் - நல்வழியில் பலருக்கு நம்பிக்கை ஏற்பட்டால் தான் அந்த இயல்பான நிலைமை ஏற்படும்.

- டாக்டர் மு. வரதராசன்
“நல்வாழ்வு”



இலவச விநியோகத்திற்காக